# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081636

1. District : மாவட்டம் மதுரை    PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு    Year: ஆண்டு 2023    FIR No. மு.த.அ. எண் 02/23    Date: நாள் 21.04.2023

2. (i) Act சட்டம்:    Sections பிரிவுகள்: U/s 7 of Pc Act 1988

   (ii) Act சட்டம்: Pc Act 1988    Sections பிரிவுகள்: as amended by the Pc

   (iii) Act சட்டம்: —    Sections பிரிவுகள்: (amendment) Act 2018.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் —    Date to : நாள் வரை ①17.04.23 பகல் சுமார் 12.00 மணி ②19.04.23 காலை சுமார் 10.15 மணி ③20.04.23 காலை சுமார் 10.30 மணி

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.04.2023    Time நேரம் : 12.05 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.04.2023    Time நேரம் : 12.55 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் —    (b) Address : முகவரி உதவி மின் பொறியாளர் அலுவலகம் (பகிர்மானம்), அவனியாபுரம், மதுரை 9 கி.மீ தெற்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் க.முனியாண்டி    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கந்தசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 63/2023    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —    Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் கட்டிட ஒப்பந்ததாரர்.    (g) Address : முகவரி பிளாட் எண்.13, MGR குறுக்கு தெரு, வ.உ.சி முதல் தெரு, CAS நகர், அவனியாபுரம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. பழனிமுருகன், வணிக ஆய்வாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம் (பகிர்மானம்), அவனியாபுரம், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – தாமதமில்லை –

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/4/2023.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.04.2023 at 13.45 மணி

Name: பெயர் க.குமரகுரு
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஐ.த.க. பிரிவு
மதுரை (21.04.2023)

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 21.04.2023-ஆம் தேதி மதியம் 12.05 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்தபோது, மதுரை, அவனியாபுரம், C.A.S.நகர், வ.உ.சி. முதல் தெரு, பிளாட் எண் 13, M.G.R. குறுக்குதெருவைச் சேர்ந்த கந்தசாமி மகன் க.முனியாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் க. முனியாண்டி, த/பெ. கந்தசாமி, பிளாட் எண். 13, M.G.R. குறுக்கு தெரு, வ.உ.சி. முதல் தெரு, C.A.S. நகர், அவனியாபுரம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை அவனியாபுரம், C.A.S. நகர், வ.உ.சி. முதல் தெரு, M.G.R. குறுக்கு தெருவில் பிளாட் எண். 13-ல் எனது மனைவியுடன் வசித்து வருகின்றேன். நான் B.A. (Economics) படித்து உள்ளேன். எங்களுக்கு இந்துமதி என்ற மகளும், பார்த்திபன் என்ற மகனும் உள்ளார்கள். நான் கடந்த 2018-ஆம் ஆண்டில் நான் குடியிருக்கும் வீடான மதுரை தெற்கு தாலுகா 41 நிர் அவனியாபுரம் கிராமம் R.S. No. 387 மற்றும் 388 கட்டுப்பட்டுள்ள பிளாட் எண். 13 -ல் உள்ள 3 ½ செண்ட் இடத்தை மதுரைச் சேர்ந்த நாகராஜ் என்பவரிடமிருந்து விலைக்கு பேசி, அதனை இரண்டாக பிரித்து தென்புரத்தில் உள்ள 799 சதுரடி இடத்தை எனது பெயரில் மதுரை தெற்கு, இணை எண் 4 சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.5634/2018, நாள்: 21.05.2018-ன் படியும், அந்த பிளாட்டின் வடபுரத்தில் இருந்த 709 சதுரடி இடத்தை, எனது மகள் இந்துமதி பெயரில் இணை எண் 4 சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 5633/2018, நாள்: 21.05.2018-ன் படியும், பத்திரம் பதிவு செய்தேன். அந்த இடத்தில் வடபுரத்தில் எனது மகள் பெயரில் ஒரு வீடும், தென்புரத்தில் எனது பெயரில் ஒரு வீடும் PMAY திட்டத்தில் மானியம் பெற்று வீடு கட்டியுள்ளோம். அந்த இரண்டு வீட்டிற்கும் ஒரே மின் இணைப்பு எண். 05-064-005-2244-ன் படி எனது மகள் இந்துமதி பெயரில் பெற்று, அதனை பயன்படுத்தி வருகின்றேன். எனது மகள் கடந்த 2020 -ஆம் ஆண்டு பணிமாறுதல் காரணமாக ராஜபாளையம் சென்றதால், சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறார். ஆகையால் மேற்படி எனது மகள் பெயரில் கட்டியவீட்டை கடந்த 28.11.2020 -ஆம் தேதி எனது பெயருக்கு தானமாக கொடுத்துவிட்டார். மேற்படி இடத்தை இணை எண் 4 சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2036/2020, நாள்: 28.11.2020-ன்படி பதிவு

செய்யப்பட்டுள்ளது. நான் அந்த வீடுகளை கட்டும் போது, முறையாக கட்டிட கட்டுமான மின் இணைப்பு (Tariff- LM 6) பெற்று கட்டினேன். பிறகு அக்கட்டிட கட்டுமான மின் இணைப்பை குடியிருப்பு மின் இணைப்பாக (Domestic) மாற்றுவதற்காக உதவி மின் பொறியாளர், TANGEDCO, அவனியாபுரம் மின் அலுவலகத்தில் முறையாக மனுக் கொடுத்து, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மாற்றினோம். நான் குடியிருக்கும் வீட்டிற்கு தென்மேற்கு மூலையில் எங்கள் வீட்டின் சுவற்றை ஒட்டி, சுமார் 1 அடி தூரத்தில், TNEB - HT Line (High Tension Line) செல்லும் சுமார் 30 அடி உயரமுள்ள இரும்பு மின் கம்பம் உள்ளது. அதனையடுத்து சுமார் 150 அடி தூரத்தில் கிழக்கு திசையில், மற்றொரு மின் கம்பமும் அதேபோல் உள்ளது. HT Line செல்வதால் எங்கள் வீட்டிற்கு பயமாகவும், இடையூறாகவும் உள்ளது. அதனால் நானும், எனது மகளும் அதனை, வேறு இடத்தில் மாற்றி வைப்பதற்காக முடிவு செய்து, அதற்கான விண்ணப்ப மனுவை எனது மகள் இந்துமதி பெயரில் கொடுத்தேன். எனவே, நான் அந்த விண்ணப்பத்துடன், இந்துமதி வீட்டிற்கான வீட்டு வரி ரசீது மற்றும் வீட்டின் பத்திரத்தின் நகல்களை இணைத்து கடந்த பிப்ரவரி மாத கடைசியில் அவனியாபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு AE இல்லாததால் அங்கு பணியிலிருந்த Commercial Inspector திரு.பழனிமுருகன் அவர்களிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கி AE டேபிளில் வைத்தார். பின்னர் மூன்று வாரம் கழித்து எனது மனு சம்மந்தமாக அதன் பின்பு தகவல் ஏதும் தெரியாததால், கடந்த 13.03.2023-ஆம் தேதியன்று நான் மீண்டும் அவனியாபுரம் AE அலுவலகத்திற்கு சென்று CI திரு.பழனிமுருகனை பார்த்த போது, அவர் என்னை AE அவர்களை பார்க்கும்படி கூறினார். நானும் AE யை சந்தித்தேன். AE யை சந்தித்தபோது நிறைய செலவாகும் என்று கூறினார். நான் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்த தயாராக இருக்கறேன் என்று கூறிய பின்னர், அவர் டேபிளில் இருந்த மனுவில் சுருக்கொப்பம் செய்து என்னிடம் கொடுத்து CI யிடம் கொடுங்கள் என்று கூறினார். நானும் அந்த மனுவை CI யிடம் கொடுத்தபோது, இரண்டு நாட்கள் கழித்து வில்லாபுரத்தில் உள்ள AD அலுவலகத்திற்கு சென்று ஆன்லைன் பதிவு கட்டணத்தை செலுத்த கூறினார். அதன் காரணமாக நான் கடந்த 14.03.2023-ஆம் தேதியன்று வில்லாபுரம் AD அலுவலகத்திற்கு சென்று, எனது விண்ணப்பத்திற்காக பதிவு கட்டணம் ரூ.2,360/-த்தை ஆன்லைன் மூலமாக அவ்வலுவலகத்தில் கட்டி, அதற்கான ரசீதை பெற்றேன். அவர்கள் மதிப்பீடு கட்டணம் ஒரு

லட்சத்திற்கு மேல் வருவதால் என்னை அரசரடி EE ஆபிசுக்கு போய் பார்க்கும்படி கூறினார்கள். பின்னர் கடந்த 17.04.2023-ஆம் தேதியன்று பகல் சுமார் 12.00 மணிக்கு, நான் மீண்டும் அவனியாபுரம் AE பார்க்க அவரது அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது CI பழனி முருகன் என்னிடம் EE எனது விண்ணப்பத்திற்கான அனுமதி உத்தரவு வழங்கி விட்டார் என்றும், அந்த இரண்டு மின் கம்பங்களை மாற்றி வைப்பதற்கு, ரூ.1,78,817/-க்கான தொகை DD எடுத்து வரும்படி கூறினார். உடனே நான் தவிட்டுசந்தை SBI பேங்கிற்கு சென்று, அங்குள்ள எனது அக்கவுண்டு மூலமாக செக் கொடுத்து, அத்தொகைக்கான DD எண். 164368-ன் பிரகாரம் DD பெற்றேன். அதனை AE அலுவலகத்தில் இருந்த CI பழனி முருகனை பார்த்து நேரடியாக கொடுத்தேன். அப்போது அவர் அரசு செலுத்த வேண்டிய பணத்தை தவிர தனக்கு செலவிற்காக தனியாக ரூபாய் நாற்பதாயிரம் கொடுக்கவேண்டும் என்று கூறினார். நான் அவரிடம் இது அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லை அது தனக்கு தனியாக தரவேண்டும் என்றும், அவ்வாறு கொடுக்காவிட்டால் அம்மின் கம்பங்களை மாற்றி தர ஏற்பாடு செய்ய முடியாது என்றும் கூறினார். அவர் என்னிடம் 19.04.2023 -ஆம் தேதி வந்து DD க்கான ரசீதை பெற்றுக்கொள்ளும்படி கூறினார். பின்னர் அந்த ரசீதை பெறுவதற்காக நான் 19.04.2023-ஆம் தேதியன்று காலை சுமார் 10.15 மணிக்கு AE அலுவலகத்திற்கு சென்று CI பழனி முருகனை பார்த்த போது, என்னிடம் அந்த இரசீதை கொடுத்துவிட்டு, நான் கேட்ட பணம் ரூபாய் நாற்பதாயிரம் ஏற்பாடு செய்துவிட்டீர்களா? என்று கேட்டார். அதற்கு நான் பணம் இன்னும் ஏற்பாடு செய்யவில்லை என்று கூறினேன். மேலும் நான் அவரிடத்தில் என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை எனக் கூறிவிட்டு எனது வீட்டிற்கு வந்து விட்டேன். இத்தகவலை எனது மகள் இந்துமதியிடம் கூறினேன். அவரும் அதனை கேட்டு மிகவும் வருத்தப்பட்டார். பின்னர் வேறு வழியில்லாமல் கடந்த 20.04.2023-ஆம் தேதியன்று காலை சுமார் 10.30 மணிக்கு அவனியாபுரம் AE அலுவலகத்திற்கு சென்று, CI திரு.பழனிமுருகனை பார்த்து எனது மகள் விண்ணப்பம் சம்பந்தமாக செலவில்லாமல் செய்து தரும்படி மன்றாடி கேட்டேன். அதற்கு அவர் ரூ.40,000/- தனக்கு கொடுத்தால்தான் அம்மின் கம்பங்களை மாற்றி தர ஏற்பாடு செய்து தருவேன் என உறுதியாக கூறிவிட்டார். பிறகு இந்த தகவலை எனது மகள் இந்துமதியிடம் தெரிவித்து, தனக்கு பணம் கொடுப்பதில் விருப்பம் இல்லை என்றும் அவர் மீது லஞ்ச ஒழிப்பு துறையில்

புகார் கொடுப்பதாக கூறினேன். அவரும் அதற்கு சரியென ஒத்துக் கொண்டார். எனவே, எனது வீட்டு அருகே உள்ள HT மின் கம்பங்களை மாற்றியமைக்க ஏற்பாடு செய்து தர என்னிடம் லஞ்சம் கேட்கும் அவனியாபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலக CI திரு.பழனிமுருகன் அவர்கள் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், CI திரு.பழனிமுருகன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.40,000/- கொண்டு வந்துள்ளேன். இத்துடன் 1) எனது பெயரிலுள்ள கிரைய ஆவண எண். 5634/2018, நாள்: 21.05.2018, 2) எனது மகள் பெயரிலுள்ள கிரைய ஆவண எண். 5633/2018, நாள்: 21.05.2018, 3) எனது மகள் எனது பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவண எண் 2036/2020, நாள்: 28.11.2020, 4) எனது மகள் இந்துமதி பெயரிலுள்ள மதுரை மாநகராட்சி வீட்டு வரி இரசீது எண். 0861446, நாள்: 15.12.2022, 5) எனது விண்ணப்பத்திற்கான மின் பதிவு கட்டணம் ரூ.2,360/-த்திற்கான ரசீது வரிசை எண். 0514825 -ன் அசல், 6) ரூ. 1,78,817/- தொகைக்கான DD எண். 164368 மற்றும் 7)அதற்கு CI திரு.பழனிமுருகன் அவர்களால் அளிக்கப்பட்ட மின் கட்டண இரசீது எண். 0436346 ஆகியவற்றின் நகல்களையும் இணைத்துள்ளேன். அதன் பேரில், எனது வீட்டின் சுவற்றை ஒட்டி செல்லும் TNEB - HT Line (High Tension Line) வேறு இடத்தில் மாற்றி வைப்பதற்கு என்னிடம் ரூ.40,000/- லஞ்சம் கேட்கும் அவனியாபுரம் உதவி மின் பொறியாளர் அலுவலக Commercial Inspector திரு.பழனிமுருகன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (க.முனியாண்டி), 21.4.23.

**Sir, received the written complaint on 21.04.2023 at 12.05 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 2/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018**

at 12.55 hrs and took up investigation. Sd./-XXXXXX (K.Kumaraguru) 21.04.2023, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.Ka.Muniyandi, S/o.Kandasamy, Plot No.13, M.G.R. Cross Street, V.O.C. First Street, C.A.S.Nagar, Avaniyapuram, Madurai along with 1) Copy of the Registered Sale Deed Document No.5634/2018, dated 21.05.2018 in the name of K.Muniyandi, 2) Copy of the Registered Sale Deed Document No.5633/2018, dated 21.05.2018 in the name of his daughter Tmt.Indumathi 3) Copy of the Registered Dhana settlement Document No.2036/2020, dated 28.11.2020 in the name of K.Muniyandi, 4) Copy of Madurai Corporation, House Tax Receipt No.0861446, dated 15.12.2022 in the name of M.Indumathi, 5) EB Registration Fee Receipt No.0514825 for Rs.2,360/- Original 6) Copy of Demand Draft No.164368 for Rs.1,78,817/- and 7) Copy of EB Receipt No.0436346 for the amount of Rs.1,78,817/- are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

21/4/2023

(K.Kumaraguru)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.